அது கூட்டுறவுத்துறையில் ஏற்படுத்தப்பட்டது. மேலும் அங்கே 20, 40 கவுண்டுகள் தான் உற்பத்தி செய்கிறோம். அங்கே நெசவுத் தொழிலைக்கொண்டுவருவது கூட்டுறவுத் துறையைப் பாதிக்கும்.

Visit of Trade Mission to Tamil Nadu

* 404 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a team of Businessmen led by Mr. Noel Burne, visited this State around 12th March 1973;

(*b*) if so, whether they held any discussions with the Hon-Minister; and

(*c*) the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) & (உ) தூதுக்குழுவின் தலைவர் திரு. நோயல் பர்ன் என்பவரும் பர்மிங்காம் தொழில் வணிகத்துறை கழகத்தின் செயலாளரும் என்னைச் சந்தித்துப் பேசினர். பேச்சு வார்த்தைகள் பொதுப்படையான முறையில் அமைந்திருந்தது.

THIRU N. DENNIS: Sir, may I know the places they had visited in the State other than the Madras City and whether they had made any suggestions of common interest to the Stae ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக இப்படி வெளி நாட்டில் இருந்து வருபவர்கள் பல மாநிலங்களுக்குச் சென்று அங்கேயுள்ள தொழில் வாய்ப்புகளையும், எதிர்காலத்தில் டெக்னிகல் கொலாபரேஷன் மூலமாக புதியதாக என்ன என்ன தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்கிறார்கள். இங்கே வேறு எதுவும் குறிப்பிட்டுப் பேசப்பட வில்லை.

கோவை மாவட்டத்தில் நிலப்பட்டாக்கள் வழங்கல்

* 405 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?